பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 92

புதன்கிழமை
26 பெப்ரவரி 2025

மாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## செல்வம் எம்.பி. பாதீட்டுக்கு ஆதரவு

கொழும்பு, பெப். 26
தேசிய மக்கள் சக்தியின் 2025ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்துக்கு 15

பட்ஜெட் மீதான

# இரண்டாவது வாசிப்பு நேற்று நிறைவேற்றம்!

### ஆதரவு வாக்குகள் 155, எதிர் வாக்குகள் 46

**கொழும்பு, பெப்ரவரி 26**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் இரண்டாவது மதிப்பீடு (வாசிப்பு) மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நேற்று நிறைவேற்றப்பட்டது.** 15

## உழவியந்திரம் கவிழ்ந்து குடும்பத்தலைவர் இறப்பு!



யாழ்ப்பாணம், பெப். 26
நெடுந்தீவில் நேற்றுமுன்தினம் இரவு உழவியந்திரம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குடும்பத் தலைவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நவரத்தினம் ஜங் 15

கிளிநொச்சியில்

## ஆசிரியர்கள், அதிபர்களின் பாதுகாப்பை உறுதிசெய்க!

### பதில் மாவட்டச் செயலரிடம் வலியுறுத்து

கிளிநொச்சி, பெப். 26
கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரனிடம் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத்தின் 15

வெளிநாட்டு ஆசைகாட்டி

## பணமோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 26
பிரிட்டனுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சம்பவம்தொடர்பில்மேலும் தெரியவருவதாவது:-
பிரிட்டனில் வசித்துவரும் இளைஞர் ஒரு 15

## முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துங்கள்

### கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, பெப். 26
வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தில் பெரும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. அவர்களின் துயர்துடைக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக் காட்டியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் 15

பெண் உதவிப் பிரதேச செயலரின்

## மரணத்தில் சந்தேகம் பெற்றோர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 26
தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராக இருந்த பெண்ணின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 15

இலங்கைச் சிறைகளில் உள்ள

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

### தமிழகத்தில் உணவுத்தவிர்ப்பு

மன்னார், பெப். 26
இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி தமிழகத்தில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 15

## பாப்பரசர் தொடர்ந்தும் கவலைக்கிடம்

உரோம், பெப். 26
கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பர 15

## அரிசித் தட்டுப்பாட்டுக்கு நாய்கள்தான் காரணமாம்

### ஆளுங்கட்சி எம்.பி. திலகநாதன் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 26
இலங்கையில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டுக்கு நாய்கள்தான் காரணம் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கால்நடை மருத்துவருமான 15



'குரங்கால தான் கறண்ட் கட் என்டும், நாயாலதான் அரிசித் தட்டுப்பாடு என்டும் வாய்பேசாத ஜீவன்களிலயே பழி போடுறது சுகம் கண்டியளோ'

## சாந்தனுக்கு துயிலாலயம்

யாழ்., பெப். 26
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர் விடுதலையான நிலையில் தமிழகத்தில் உயிரிழந்த சாந்தனுக்கு அவரது குடும்பத்தினரால் 15

சென். பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி

## பொன் அணிகளின் போர் ஆரம்பமாகின்றது நாளை

யாழ்ப்பாணம், பெப். 26
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது.
108ஆவது தடவையாக இந்த 15

## குடும்பப்பெண் விபத்தில் பலி

முல்லைத்தீவு, பெப். 26
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
தனது கண 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4000 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 03 56 64 72 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1067 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 29 38 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 026 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 1 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2106 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 14 18 19 28 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5758 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 3 5 8 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1788 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 03 11 19 62 |
| விசேட எழுத்து | C |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 333 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 8 1 |

# வறண்ட வானிலை தொடர்ந்தால் மின்கட்டணங்கள் உயரக்கூடும்!

*மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, பெப்.26**

**தற்போது நிலவிவரும் வறண்ட வானிலை தொடருமாக இருந்தால், மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கவேண்டியிருக்கும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.**

மாத்தளை மாவட்டப் பொறியியலாளர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மின்சாரக் கட்டணங்கள் 20 வீதம் குறைக்கப்பட்டுள்ளன. ஆயினும் வறண்ட வானிலை தொடர்ந்தால் கட்டணம் அதிகரிக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன.

மின்சாரசபை 140 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டுகின்றது என்று கூறப்பட்டாலும், மின்சாரசபைக்கு எந்த இலாபமும் இல்லை - என்றார். (எ-இ)



## அரசாங்கத்தின் மீது பிச்சை மழை

*பொழிந்து தள்ளினார் அர்ச்சுனா*

யாழ்ப்பாணம், பெப். 26

அரசாங்கம் வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதியானது தமிழர்களுக்குப் போடப்பட்டுள்ள பிச்சை. உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை மையப்படுத்தியே இந்தப் பிச்சை போடப்பட்டுள்ளது. தமிழன் பிச்சை எடுப்பதற்குத் தயாராக இல்லை என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

35 ஆண்டுகளாக இடம்பெற்ற போரில் வடக்கு, கிழக்கில் எமது சமூகம், அனைத்துச் சொத்துகளையும் இழந்து நிற்கின்றது. அந்தவகையில் நீங்கள் ஒதுக்கிய நிதியொதுக்கீடு நீங்கள் போட்ட பிச்சைதான். நீங்கள் சீனாவிடம் போய் பிச்சை எடுப்பீர்கள், இந்தியாவிடம் போய் பிச்சை எடுப்பீர்கள் அந்தப் பிச்சையிலே வடக்கு - கிழக்கில் உள்ள எங்களுக்கு ஒரு பகுதியைப் போட்டுவிட்டு வடக்கு மக்களுக்கு பெரும் நிதி ஒதுக்கியுள்ளதாக பெருமை பேசிவருகிறீர்கள்.

நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குங்கள். நாங்கள் பில்லியன், ரில்லியன் பணம் கொண்டுவருகின்றோம்.

நாங்கள் காங்கேசன்துறையைப் புனரமைத்து அங்கிருந்து உங்களுக்கு சிமெந்தைத் தருகின்றோம், கந்தளாயிலிருந்து சீனி தருகின்றோம். ஆனையிறவில் இருந்து உங்களுக்கு உப்பு தருகிறோம். உங்களுக்கு நாங்கள் போடுகிறோம் பிச்சை - என்றார். (ச-125)

## மாகாணங்களில் சைபர் குற்றப் பிரிவு

கொழும்பு, பெப். 26

மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயற்படுகின்றது.

அதன் கீழ் சைபர் குற்ற விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று இயங்குகின்றது.

சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளை மொத்தம் 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0466 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 5 2 0 7 6 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2732 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 04 20 27 56 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 08 32 55 70 |
| வெற்றி வாரம் | 4893 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0630 |
| வெற்றி இலக்கம் | 22 26 48 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| கடகம் | |
| வெற்றி இலக்கம் | 33 38 41 43 |
| சீட்டிழுப்பு வாரம் | 4444 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 40 41 49 71 |
| வெற்றி வாரம் | 1908 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 25.02.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 17 34 49 68 |
| வெற்றி வாரம் | 2558 |

# ஜே.வி.பி.யில் இருந்திருந்தால் தமிழீழம் மலர்ந்திருக்குமாம்!

*விமல் வீரவன்ஸ கூறுகின்றார்*



கொழும்பு, பெப்.26

போரை முடிப்பதற்காக அன்று ஜே.வி.பி.யிலிருந்து வெளியேறி மஹிந்த ராஜபக்சவை ஆதரித்திருக்காவிட்டால் இன்று தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சிங்களத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியிலிருந்து வெளியேறி இருக்காவிட்டால் இன்று நீங்களும் உயர்பதவியில் இருந்திருக்கக்கூடும் அல்லவா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நான் அன்று அவ்வாறு வெளியேறி இருக்காவிட்டால் நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கும். நாம் வாழும் (சிங்களவர்கள் வாழும்) தெற்காசியாவில் பாலஸ்தீனமாக மாறி இருக்கும். மறுபுறத்தில் தெற்காசியாவில் இஸ்ரேலாக தமிழ் ஈழம் மாறியிருக்கும்.

ராஜபக்சக்களை பலப்படுத்துவதற்காக அல்ல, புலிகளைத் தோற்கடித்து போரை முடிவுக்குக் கொண்டுவந்து, ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காகவே அன்று அந்த முடிவை எடுத்தேன்.

அன்று நாம் அந்த முடிவை எடுத்திருக்காவிட்டால், இலங்கை என்ற நாடு இன்று மிஞ்சியிருக்காது. அவ்வாறு அல்லாவிட்டால் காஸா பகுதி போல்தான் ஒரு நாடு இருந்திருக்கும். ஜே.வி.பியில் இருந்தபோதும், வெளியேறியுள்ளபோதிலும் நாட்டுக்காக எமது பொறுப்பை நிறைவேற்றுவோம் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் சுற்றிவளைப்பில்

# 366 கிலோ ஹெரோய்ன் 6 மாதங்களில் மீட்பு

**கொழும்பு, பெப். 26**
**கடந்த 6 மாதங்களில் 366 கிலோ கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.**

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். போதைப் பொருள் தொடர்பில் இலங்கைப் பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் நாளாந்தம் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதில் கடந்த 6 மாதங்களில் 366 கிலோ கிராம் ஹெரோய்ன், 4 ஆயிரத்து 796 கிலோ கிராம் கஞ்சா, 791 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவற்றுடன், இவற்றால் பெற்றுக்கொள்ளப்பட்ட 318 மில்லியன் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)




நல்லதுக்குக் காலமில்லை எண்டு ஆக்கள் அடிக்கடி சொல்லுறதைக் கேட்டிருப்பியள். நல்லதைச் செய்யிறவைக்கும் இப்ப காலம் சரியில்லை. இந்தத் திசைகாட்டி அரசாங்கம் ஊழல், மோசடி எல்லாத்தையும் அழிச்சு நாட்டைச் சுத்தமா வைக்கப்போறம் எண்டு கனக்கக் கதைக்குது. ஆனால் கதைக்கிறது ஒண்டு, செய்யிறது வேற ஒண்டாத்தான் கிடக்குது. காவல் சரியா இருந்தாத்தான் கள்ளருக்குப் பயம் இருக்கும். ஆனால் இஞ்ச என்னடா வெண்டால்,வடிவாக் காவல் காக்கிற ஆக்களை அதில இருந்து தூக்கியடிச்சால் கள்ளருக்குத்தானே வசதி. அப்பிடி கள்ளருக்கும், மோசடிக்காரருக்கும் வசதி செய்து குடுக்கிறமாதிரித்தான் யாழ்ப்பாணத்துப் பொலிஸ்காரர் நடக்கினம் போல.

யாழ்ப்பாணத்தில நடக்கிற காசுமோசடி, கள்ளக் காணி மோசடி, ஏஜென்ஸிக்காரர் காசை வாங்கிக் கொண்டு ஏமாத்திறது எண்டமாதிரி சிறுகுற்றங்களைப் பிடிக்கிற பிரிவுக்கு பொறுப்பா தமிழர் ஓராள்தான் இவ்வளவு நாளும் இருந்தவர். எல்லாக் கேஸையும் கெதியில பிடிச்சு, மோசடிக்காரரை கண்மூடித்திறக்கிறதுக்குள்ள பிடிச்சுக்கொண்டு வாறதில ஆள் விண்ணன். எப்பிடியோ மோசடிக்காரரை மோந்துபிடிச்சு அவையிட்ட காசை மீட்டு , பாதிக்கப்பட்ட ஆக்களின்ர வயித்தில பாலை வார்த்த கன தரமான சம்பவங்களை இந்தக் 'குணமான' பொலிஸ் அதிகாரி செய்திருக்கிறார். அதிலையும் கள்ள உறுதி முடிச்சு கனபேரின்ர காணியளை விழுங்கிறதுக்கு பின்னணியில நிண்டதா சில லோயர்மாரைக் கூட அலாக்காத் தூக்கி உள்ளுக்க வைக்கிறளவுக்கு, ஆர் எவரெண்ட பாரபட்சம் பாக்காமல் நடக்கிறவர். இப்பிடி லோயர்மாரை அடைச்சதால அவருக்கு எதிரா வழக்குகளும் போட்டவை. காய்க்கிற மரம் கல்லடி வாங்கிறது வழக்கம்தானே.

ஆனால் இப்ப அப்பிடி காவல்காத்தவரைத் திடீரெண்டு வேற பிரிவுக்கு மாத்திப்போட்டினம். யாழ்ப்பாணத்தில காசுமோசடி, காணி மோசடி எண்டு எல்லாவிதமான மோசடியளையும் தன்ர பிரிவின்ர துணையோட கட்டுப்படுத்தி வைச்சிருந்தவரை ஏன் வேற பிரிவுக்கு மாத்தினவை எண்டு ஒருகாரணமும் சொல்லுப்படேலை. சில வேளை புரமோஷன் குடுத்து மாத்தியிருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் இதென்னவோ 'பனிஷ்மெண்ட்டில' குடுக்கிறமாதிரி, வேலைவெட்டி இல்லாத இன்னொரு பிரிவுக்கு மாத்தியிருக்கினம். அந்தக் குணமான பொலிஸ் அதிகாரி மோசடியளைத் தடுக்கிறதும், மோசடி செய்தவையை பிடிச்சுக்கொண்டு வந்து தங்களைவிட நல்லபேர் எடுக்கிறது பிடிக்காததாலையும் இப்பிடி மேலதிகாரிமார் அவரை மாத்தியிருக்கலாம்.இல்லாட்டி இந்தக் குணமான பொலிஸ் அதிகாரி, மேலதிகாரியளுக்கு வேண்டப்பட்டவையின்ர மோசடியளைக் கண்டுபிடிச்சதால, அந்தக் கோபத்திலையும் இப்பிடி ஒரு விளையாட்டை மேலிடம் காட்டிட்டோ தெரியா. என்னதான் இருந்தாலும் மாற்றம், மண்ணாங்கட்டி எண்டு வந்த அரசாங்கம் இப்பிடி ஒரு நேர்மையான, ஆருக்கும் அஞ்சாத ஒரு அதிகாரிக்கு இப்பிடி ஒரு அநீதி நடந்ததைப் பார்த்தும் பார்க்காமல் இருந்தால், இந்த அரசாங்கமும் முந்தின ஆக்கள் மாதிரி ஊழல், மோசடிக்கு துணை போகுதோ எண்ட சந்தேகம் சனத்துக்கு வந்திடும். அப்பிடி வராமல் திசைகாட்டிக்காரர் பார்த்துக் கொள்ளோணும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஐவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.26
திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் வழக்குத் தவணைகளுக்குச் செல்லாது இருந்த ஐவருக்கு மல்லாகம் நீதிமன்றம் திறந்த பிடியாணை பிறப்பித்திருந்தது கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-125)

இந்த வருடத்தில்

## 17 துப்பாக்கிச்சூடுகள் 49 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 26
இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்றுள்ள 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 49 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.
நாட்டில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுள் 11 சம்பவங்கள் பாதாளக் குழுக்களுடன் தொடர்புபட்டவை. ஏனைய 6 சம்பவங்களும் நபர்களுக்கிடையிலான மோதலால் ஏற்பட்டவையாகும். இந்த 17 சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள், ஒத்துழைப்பு வழங்கியவர்கள் என மொத்தம் 49 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இக்காலப்பகுதியில் ரி-56 ரகத் துப்பாக்கிகள் 4 உட்பட மொத்தமாக 11 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், 5 மோட்டார் சைக்கிள்கள், ஒரு கார், ஒரு ஹைஏஸ் மற்றும் இரு ஓட்டோக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## மாடு கடத்தல் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், பெப். 26
உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமாக லொறி ஒன்றில் 18 மாடுகளை கடத்திய சந்தேகநபர் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த லொறியை சாவகச்சேரி நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்து சோதனையிட்ட போதே மாடுகள் மீட்கப்பட்டன. சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-125-27)

## ஞானசாரருக்குப் பிணை

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரரை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
தன்னை பிணையில் விடுவிக்கக் கோரி ஞானசார தேரர் தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவை விசாரித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
இந்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி, கொழும்பு நீதவான் நீதிமன்றம், இஸ்லாம் மதத்தை அவமதித்ததற்காக கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஒன்பது மாத கால சிறைத்தண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கால்நடைகள் திருட்டு; அரசால் நடவடிக்கை

கொழும்பு, பெப். 26
கால்நடை திருட்டுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாயக் கால்நடை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.
தற்போது கால்நடை திருட்டுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது.
அந்தவகையில் கால்நடை திருட்டைக் கட்டுப்படுத்தும் முகமாக கால்நடை திருட்டுகளுக்கு எதிரான சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தண்டம் உயர்த்தப்படும் திருடப்பட்ட கால்நடைகளின் எலும்புகளும்,மண்டை ஓடுகளுமே கண்டுபிடிக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
## ராசிபலன்

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிச்சுமை சற்று அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் குறைவாகவே கிடைக்கும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம்.

**மீனம்:** ஆதாயகரமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.



# மரக்கறிகள் விலை சரிவு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகையின் விலை சடுதியாகச் சரிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் உச்சத்தில் காணப்பட்ட மரக்கறி வகைகளின் விலை தற்போது திடீரெனக் குறைந்து செல்வதாகச் சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய நிலைவரப்படி கத்தரிக்காய் கிலோ 200 ரூபா, பயிற்றங்காய் கிலோ 200 ரூபா, தக்காளிப்பழம் கிலோ 100 ரூபா, பாகற்காய்கிலோ 300 ரூபா, பூசணிக்காய்கிலோ 120 ரூபா, பீற்றூட் கிலோ 200 ரூபா, கோவா கிலோ 250 ரூபா, கரட் கிலோ 600 ரூபா, கீரை ஒரு பிடி 50 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டன. (ச-41-17)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 26

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா மகா சிவராத்திரி நன்னாளான இன்று புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சிறப்பாக இடம்பெறவுள்ளது. நாளை வியாழக்கிழமை அதிகாலை கண்டகிதீர்த்தக் கடலில் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார். (ச-25,66)

# 'பிரபஞ்சத்தில் தூபம்' நூல் வெளியீடு !

முல்லைத்தீவு,பெப்.26

கல்வியியலாளரும், எழுத்தாளருமான திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய 'பிரபஞ்சத்தில் தூபம்' நூல் வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு மல்லாவி ஒட்டான்குளம் பாணலிங்கேஸ்வரம் நர்மதா நதீஸ்வரர் சிவன் ஆலய மண்டபத்தில் மகா சிவராத்திரி நாளான இன்று புதன்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அத்துடன் இரவு 9 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை தூபம் தயாரிக்கப் பயன்படும் இயற்கை மூலிகைகளின் கண்காட்சியும் இடம்பெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச-66)

# PickMeஇன் 'நன பகன': கல்விக்கான ஆதரவு மூலம் ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை உயர்த்துதல்

இலங்கையின் முன்னணி செயலி அடிப்படையிலான நகர்வுத் தளமான PickMeஐ உருவாக்கிய Digital Mobility Solutions Lanka PLC., தொடர்ந்து 8ஆவது ஆண்டாக தனது வருடாந்த 'நன பகன' விசுவாச வெகுமதி நிகழ்வை நடத்தியது. BMICHஇல் உள்ள Lotus மண்டபத்தில் பெப்ரவரி 12, 2025 அன்று நடைபெற்ற இந் நிகழ்வு, PickMeஇன் ஓட்டுநர் நன்மை சார்ந்த விசுவாசத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய முன்முயற்சியாகும். இது PickMe இன் அர்ப்பணிப்புள்ள சுயாதீன மூன்றாம் தரப்பு ஓட்டுநர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கல்வி ஆதரவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 'நன பகன', உயர் செயல்திறன் மிக்க ஓட்டுநர்களின் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இத் திட்டத்தின் மூலம் 4,150இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைகிறார்கள். இவ்வாண்டு, இம்முயற்சி 650இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசு வவுச்சர்களை விநியோகிப்பதன் மூலம் அதன் நோக்கத்தை தொடரவுள்ளது. இதன் மூலம் அவர்கள் தமது கல்விப் பயணத்திற்கு தேவையான பாடசாலைப் பொருட்களை பெறுவது உறுதி செய்யப்படும். இற்றைவரை மொத்தமாக ரூ. 20 மில்லியன் முதலீட்டையும், 2025ஆம் ஆண்டிற்கு மேலதிகமாக ரூ.7.5 மில்லியனையும் ஒதுக்கியுள்ள PickMe, அதன் ஓட்டுநர் சமூகத்தில் நன்மையான தாக்கத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளது.

### ஓட்டுநர் நலனுக்கு முன்னுரிமை அளித்தல்

ஓட்டுநர் நலனுக்கான PickMeஇன் அணுகுமுறை போட்டித்தன்மை வாய்ந்த வருமானத்திற்கு அப்பாற்பட்டது. நிறுவனம், அதன் செயலி (My Finance) ஊடாக தங்கள் சுயாதீன ஓட்டுநர்களிற்கு நிகழ்நேர பணத் தீர்வுகளை உறுதிசெய்கிறது. இதன் மூலம் அவர்களது வருமானம் எந்தவொரு பரிவர்த்தனை கட்டணமும் இன்றி அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது. மேலும், ஓட்டுநர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் விரிவான 24/7 அழைப்பு மைய ஆதரவு, தனித்துவமான விசுவாசம் மற்றும் வெகுமதித் திட்டம் மற்றும் சலுகை விலையில் தனிப்பயனாக்கப்பட்ட காப்பீட்டு பக்கேஜ்களையும் PickMe வழங்குகிறது.

PickMeஇன் வலையமைப்பு நாடு முழுவதும் விரிவடைந்து வருவதால் ஓட்டுநர்களை இலகுவாக அணுகவும் அவர்களுக்குரிய உதவி கிடைப்பதை உறுதிபடுத்தும் வகையில் கிளை ஆதரவின் நிறுவல் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த விரிவான ஆதரவு அமைப்பானது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைத் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதுடன் சுயாதீன ஒப்பந்தக்காரர்களாக செயற்படும் ஓட்டுநர் மற்றும் riderகளுக்கு வசதியையும் வழங்கி வலுவான ஓட்டுநர்நிறுவன உறவை வளர்க்கிறது.

'நன பகன' திட்டத்திற்கு ஓட்டுநர்கள் எவ்வாறு தகுதி பெறுகிறார்கள்

'நன பகன' முயற்சிக்கான தகுதி, பண பங்களிப்புகளுக்கு அப்பால் பல செயல்திறன் அளவீடுகளின் அடிப்படையில் ஓட்டுநர்களை மதிப்பிடும் கடுமையான தெரிவுச் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கம், நம்பகத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் கருத்து போன்ற காரணிகள் திட்டத்தின் பெறுநர்களை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. PickMeஇன் விசுவாசத் தரவரிசையின் பினாட்டினம் பிரிவைச் சேர்ந்த ஓட்டுநர்கள் மட்டுமே விருதுக்கு தகுதி பெறுகிறார்கள்.

PickMeஇன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான ஜிப்ரி ஸுல்பர், இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கருத்து தெரிவிக்கும் போது, "PickMe ஓட்டுநர்களை ஆதரிப்பது நிதி நன்மைகளுக்கு அப்பாற்பட்டது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். 'நன பகன' என்பது வெறும் ஒரு முயற்சி அல்ல; இது ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான ஒரு அர்ப்பணிப்பாகும். அவர்களின் பிள்ளைகளின் கல்வியில் முதலீடு செய்வதன் மூலம் அவர்கள் தொடர்ந்து ஊக்கத்துடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதை உறுதி செய்யும் அதே வேளை எங்கள் சமூகத்தின் எதிர்காலத்திற்கும் நாங்கள் பங்களிக்கிறோம்." எனத் தெரிவித்தார்.



### ஓட்டுநர் ஆதரவுக்கான முழுமையான அணுகுமுறை

'நன பகன'விற்கு அப்பால், PickMe அதன் ஓட்டுநர் சமூகத்திற்கு பரந்த நன்மைகளை வழங்குகிறது. கூட்டுறவு காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து ஓட்டுநர்கள் ரூ. 3 மில்லியன் வரையிலான ஆயுள் காப்புறுதித் திட்டத்தை பெறுகிறார்கள். அவர்களுக்கு நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த ஊக்கத்தொகைகள் மூலமாகவும் வெகுமதி அளிக்கப்படுகிறது. அவர்களின் நிதிச் சுமையை மேலும் குறைக்க, PickMe பல்வேறு மூன்றாம் தரப்பு கூட்டாண்மைகளின் மூலம் எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்பிற்கென பிரத்தியேக சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொவிட்19 தொற்றுநோய் போன்ற கடினமான காலங்களில், சிறப்பு எரிபொருள் விலைகள், மருத்துவ பரிசோதனைகள் மற்றும் உலர் உணவு விநியோகங்களை வழங்கியதன் மூலம் நிறுவனம் அதன் உதவிக்கரத்தை நீட்டியது. தரம் 5 புலமைப்பரிசில் தேர்வுகள், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்து விளங்கும் ஓட்டுநர்களின் பிள்ளைகளுக்கு PickMe பண வவுச்சர்களையும் வழங்குகிறது. ஓட்டுநர்கள் சிறப்பு சலுகை மொபைல் திட்டங்கள், சிக்கன கடன் வசதிகளுக்கான அணுகல் மற்றும் குறைந்த விலையில் சுகாதார சேவைகளையும் அனுபவிக்கிறார்கள்.

இந்த முயற்சிகள் ஓட்டுநர் தக்கவைப்பு, சேவைத் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தவென வடிவமைக்கப்பட்ட பரந்த PickMe Pramuka ஓட்டுநர் விசுவாசத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

'நன பகன' போன்ற முன்முயற்சிகள் மூலம் PickMe, ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வில், குறிப்பாக கல்வி ஆதரவில் முதலீடு செய்வதன் மூலம் இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைத்து வருகிறது.

வலுவான கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் ஓட்டுநர் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும் ஓட்டுநர்களும் வாடிக்கையாளர்களும் உயர்தர, நம்பகமான சேவையை தொடர்ந்து அனுபவிப்பதை PickMe உறுதி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நேர்மையான தோல்வியில் எந்த அவமானமும் இல்லை, தோல்விக்குப் பயப்படுவதே அவமானமாகும்.


—ஹென்றி போர்ட்—

# தென்னைகளின் கடைசிக்காலமா?

வடக்கு மாகாணம் உட்படப் பல இடங்களில் தென்னைகளில் வெள்ளை ஈயின் தாக்கம் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது நிலவும் வறண்ட காலநிலை வெள்ளை ஈயின் பரவலுக்கு ஏதுவாகக் காணப்படும் நிலையில், தென்னைகளில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் மாகாணத்தின் தென்னைச் செய்கையில் அது தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும். தற்போது நாட்டில் தேங்காய்க்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டு நிலைமையில், தென்னைச் செய்கையில் ஏற்படும் பாதிப்புகள் நிலைமையை இன்னமும் மோசமாக்கிவிடக்கூடும். தென்னையில் காணப்படும் வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுவதற்கு துறைசார் அதிகாரிகளும், திணைக்களத்தினரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயன்முறைகள், ஆலோசனைகள் என்பன வழங்கப்படுகின்றன. தென்னைச் செய்கையாளர்கள் இந்த வழிமுறைகளைப் பின்பற்றி வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலும், சாதாரண மக்கள் அந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதில் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பெரும்பாலான வீடுகளில் தென்னைகள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பங்களும் தங்களுக்கான தேவைகளை அந்தத் தென்னைகளின் மூலம் நிறைவேற்றிக் கொள்கின்றன . ஆனால் தென்னை மரங்களில் ஏற்படும் நோய்த்தொற்றுகள் தொடர்பாகவோ, அந்த நோய்த் தொற்றுகளைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவோ அவர்களுக்குப் போதிய அறிவு இருப்பதில்லை. தென்னைச் செய்கையாளர்கள் கொண்டிருக்கும் நோய்க்கட்டுப்பாட்டு அறிவையோ, உரிய திணைக்களங்களால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய நோய்க் கட்டுப்பாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கான வளங்களையோ அவர்கள் கொண்டிருப்பதில்லை. தங்கள் வீடுகளில் உள்ள தென்னை மரங்களில் ஏற்பட்டிருக்கும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டும், யாரைத் தொடர்பு கொள்ளவேண்டும் என்பது அறியாது மக்கள் திக்குமுக்காடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் இந்த நடைமுறைச்சிக்கல்கள், வீடுகளில் உள்ள ஓரிரு தென்னை களும் அழிந்துவிட வழிகோலிவிடும். இவ்வாறான அழிவுகள் தற்போது ஏற்பட்டிருக்கும் தேங்காய்த் தட்டுப்பாட்டை இன்னும் இன்னும் அதிகரிக்கவே செய்யும்.

மக்கள் இலகுவில் தொடர்புகொள்ளக்கூடிய, நோய்த்தொற்றைத் தடுப்பதற்கு உதவக்கூடியவர்களை மக்களுக்கு இனங்காட்டுவதன் ஊடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப்பெற்றுக்கொடுக்க முடியும். வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள், அதற்கு உதவக் கூடியவர்களை, தொழில்நுட்ப உபகரண உதவிகளை வழங்கக்கூடியவர்களை தெங்குபயிர்ச் செய்கை அதிகாரசபையினர் மக்கள் மத்தியில் அடையாளம் காட்டுவதன் ஊடாகவே தென்னைகள் அழிவடைவதைத் தடுக்கமுடியும். இதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் முடுக்கப்படாவிட்டால், சில வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் தென்னை என்பது கண்காணாப் பயிராகி விடுமென்பதே உண்மை.




கச்சதீவுப் பெருவிழா ஏற்பாடு

# கடற்படைக்கு ரூ.32 மில்லியன்

**யாழ்ப்பாணம், பெப். 26**

**புனித கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்காக அரசாங்கத்தால் 32 மில்லியன் ரூபா கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.**

புனித கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கச்சதீவுக்கான குடிதண்ணீர், போக்குவரத்து, மலசலகூடம் மற்றும் அடிப்படைத்தேவைகள் யாவும் யாழ். மாவட்டச் செயலகத்தின் கண்காணிப்புடன் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இதற்காக விசேட படகின் மூலம் பல்வேறு பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தினுடைய திருவிழாவை திறன்பட நடத்துவதற்காகவும் கடற்படைக்கு குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது.



# நாமலுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, பெப். 26

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவால் மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தொடர்பான விசாரணை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

# கந்தகாட்டிலிருந்து 4 கைதிகள் தப்பிப்பு

கொழும்பு, பெப். 26

பொலநறுவை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை தப்பிச் சென்றுள்ளனர் என வெலிகந்தப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதிகள் நால்வரும் போதைப்பொருளுக்கு அதிகம் அடிமையானவர்கள் என்றும் இதுதொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# இலங்கைக் குடும்பம் இந்தியாவில் தஞ்சம்

யாழ்ப்பாணம், பெப். 26

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுவர்கள் உட்பட 4 பேர் தலைமன்னாரில் இருந்து அகதிகளாகப் புறப்பட்டு நேற்று இந்தியாவின் இராமேஸ்வரம் அரிச்சல்முனை கடலோரப்பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

அவர்களை இந்தியக் கடலோரக் காவல்படையினர் மீட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# இந்த வாரம் 'தீ கட்டுப்பாடு'

கொழும்பு, பெப். 26

வறண்ட வானிலை காரணமாக நேற்றுமுன்தினம் முதல் மார்ச் 2 வரை 'தீ கட்டுப்பாட்டு வாரம்' கடைப்பிடிக்கப்படும் என்று பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தீ விபத்துகள் ஏற்பட்டவுடன் அவற்றை அணைப்பது மற்றும் தீ விபத்துகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தை மீட்டெடுத்தல் என்பன தொடர்பில் இந்த வாரத்தில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - மாசி - 15
27.02.2025
சுபநேரம் : 07.59 - 09.29
ராகுகாலம் :01.59 - 03.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் திருநீறு அணிவது தடுக்கப்பட்டால் முறையிடலாம்

## இலங்கை சைவசமயப் பேரவை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.26**

**சில பாடசாலைகளில் சைவ மாணவர்கள் திருநீறு அணிவதற்கு தடைவிதிக்கப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பில் முறையான விசாரணைகளை நடத்துவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் தகுந்த சான்றுகளை வழங்கவேண்டும் என்று இலங்கை சைவசமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை சைவசமயப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசியலமைப்புச் சட்டப்படி இலங்கைவாழ்மக்கள் யாவரும் தத்தம் மதங்களை (சமயங்களை) சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கு உரிமை உண்டு. இலங்கை கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் கற்கும் மாணவர்கள் அவரவர் சமயச் சின்னங்களை அணிந்து பாடசாலைக்குச் செல்வதற்குத் தடை ஏதுமில்லை.

சில பாடசாலைகளில் சைவ மாணவர்கள் சிவசின்னமான திருநீறை அணிவதற்குத் தடைவிதிக்கப்படுவது தொடர்பாகப் பல செய்திகள் வெளிவருகின்றன. எமக்கும் பலர் அறியத்தந்துள்ளனர். இது தொடர்பாக முறைப்படியான விசாரணை நடத்தப்படுவதற்குப் பாதிக்கப்பட்டவர்கள் தகுந்த சான்றுகளோடு முறைப்பாடுகளை இலங்கை கல்வி அமைச்சு, இந்து கலாசாரத் திணைக்களம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய அரச நிர்வாகப் பிரிவுகளுக்கும், அதன் பிரதியை இலங்கை சைவசமயப் பேரவைக்கும் அனுப்பிவைக்கவேண்டும். இதுதொடர்பில் எம்மைத் தொடர்புகொள்ளவும் முடியும் - என்றுள்ளது. (எ-66)

# சி.வெங்காயம் விலை சரிவு

யாழ்ப்பாணம்,பெப்.26



யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சின்ன வெங்காயச் செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் விலை சரிவடைந்துள்ளது.

அறுவடை செய்யப்படும் வெங்காயம் கூடுதலாகச் சந்தைக்கு வந்துசேருகின்றது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ 200 ரூபா முதல் 250ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. அதேசமயம் பெரியவெங்காயம் கிலோ 180ரூபா முதல் 220ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ச-33-17)

# கூட்டுறவாளர்களுக்கு இன்று விடுமுறை

யாழ்ப்பாணம்,பெப்.25

சிவராத்திரியை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவுப் பணிப்பாளர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக அனடறு புதன்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ச-41-17)



# மிளகாய் 1400/=

யாழ்ப்பாணம்,பெப்.26

கடும் வறட்சி மற்றும் வெப்பத்தினால் ஏற்பட்ட ஒருவித நோய்த்தாக்கத்தினால் மிளகாய் பயிர்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இக்காரணத்தினால் மிளகாய்ப்பயிர்கள் போதியளவு காய்க்கும் தன்மையை இழந்து வாடிய நிலையில் காணப்படுகின்றன என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். மிளகாய்ப்பயிரின் ஏற்பட்ட நோய்த்தாக்கத்தினால் மிளகாயின் விலையும் அதிகரித்தே காணப்படுகின்றன. அந்தவகையில் தற்போது ஒருகிலோ பச்சை மிளகாய் கிலோ 1400 ரூபாவாக விற்கப்படுகின்றது. (ச-33-17)

# கலைஞர்களுக்கு விருது விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 26

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2025 ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது, கலைக்குரிசில் விருது, சிறந்த நூலுக்கான விருது ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொருத்தமான கலைஞர்கள் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகதை இலக்கியம் , நாவல் இலக்கியம், மேடை நாடகம் , நாடகப் பிரதியாக்கம், கவிதை இலக்கியம், நடனம், குறும்படம், ஓவியம், சிற்பம், இசை நாடகம், இசைக்கலை, வாத்தியக் கலை, வாத்தியக் கருவி உருவாக்கம், கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை) கிராமியக் கலை, ஒப்பனைக்கலை போன்றவற்றில் தேர்ச்சிபெற்ற கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25.9)

# சிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப், 26

வரலாற்றுச் சிறப்புமிக்க நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் எழுந்தருளியுள்ள சிவதெட்சணாமூர்த்தி ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் இன்று புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 108 சிவலிங்கங்களுக்கும் நாளை அதிகாலை 5.30 மணிமுதல் நள்ளிரவுவரை அடியவர்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்து வழிபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நான்கு சாமங்களிலும் சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (ச-25,66)

◈ ◈ ◈ ◈

யாழ்ப்பாணம், பெப், 26

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு இன்று புதன்கிழமை பிற்பகல் 6 மணிக்கு சிறப்பு அபிஷேகபூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து 4 சாம வழிபாடுகள் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-41-17)

◈ ◈ ◈ ◈

யாழ்ப்பாணம், பெப், 26

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று புதன்கிழமை 4 சாமப் பூஜைகள் மற்றும் அபிஷேகம் என்பன இடம்பெறவுள்ளன.

முதலாம் சாமப் பூஜை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பு அபிஷேக வழிபாடுகள் நடைபெற்று சுவாமி வீதிவலம் வருவார்.

தொடர்ந்து இரண்டாம் சாமப் பூஜை இரவு 9 மணிக்கும், 3ஆம் சாமப் பூஜை இரவு 12 மணிக்கும் 4 ஆம் சாமப் பூஜை அதிகாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ச-41-17)

◈ ◈ ◈ ◈

யாழ்ப்பாணம், பெப்.26

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பித்து தொடர்ந்து 4 சாமப் பூஜைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு சிவராத்திரி புரா ணப்படிப்பும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ள னர்.

இவ்வாலய அறநெறிப்பாடசாலை மாணவர்களான யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தி யாலயம், யாழ். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம், மாவிட்டபுரம் கலைக்குழு என்பவற்றைச் சேர்ந்த மாணவர்களின் கலைநிகழ்வு களும் காந்தநேசன் பைரவியின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

◈ ◈ ◈ ◈

யாழ்ப்பாணம், பெப். 26

நல்லூர் சிவன் கோவிலில் மகா சிவராத்திரி தினமான இன்று புதன்கிழமை சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இரவு 7 மணிக்கு முதலாம் ஜாமப்பூஜை ஆரம்பமாகி 108 சங்காபிஷேகமும், நான்காம் ஜாமப்பூஜையில் 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும். சிறப்புப் பூஜை வழிபாடுகள் அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

யாழ்ப்பாணம், பெப். 26

சிவனுக்குரிய விரதமாகிய மஹா சிவராத்திரி தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் ஆதிசிவன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. எனவே அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசிவ குகன் குருக்கள் கேட்டுக்கொள்கின்றார். மேலதிக தகவல்களுக்கு 074 369 2974, 077 213 3694, 077 614 0849 என்ற தொலை பேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளவும். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியல் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.26

தமிழியல் ஆய்வு நடுவகம் நல்லூர்ப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் "தமிழ் இலக்கண மரபின் செல்நெறி" எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு1, நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் கு.றஜீபன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுகன் வாழ்த்துரைகளை ஆற்றுவர். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீபிரசாந் தொடக்கவுரையை நிகழ்த்துவார். ஆய்வரங்க உரைகளை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்களான கலாநிதி செ.சிவசுப்பிரமணியம், அ.சண்முகதாஸ், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா(ஓய்வுநிலை பேராசிரியர்), ஜப்பான் டோக்கியோ கக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் ச.மனோன்மணி, தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலைப் விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரன் ஆகியோர் ஆற்றுவர். கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரினா பிரான்சிஸ் தொகுப்புரை ஆற்றுவார். (ச-25-41)

# பாலியாற்று திட்டத்துக்கு நிதியொதுக்கீடு செய்க

யாழ்ப்பாணம், பெப். 26

**யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முகங்கொடுத்துவரும் நீர்விநியோகப் பிரச்சினையை நிவர்த்திசெய்வதற்கான பாலியாற்று திட்டத்துக்கு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் நிதி உள்ளடக்கப்படாமை கவலையளிக்கின்றது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஏழு தசாப்தங்களாக யாழ்ப்பாண மாநகரம், தீவகம் மற்றும் தென்மராட்சி மக்கள் சுகாதாரமான நீரைப் பெற்றுக்கொள்வதற்கு நெருக்கடிகளை சந்திக்கின்றனர். 2024 ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தில் பாலியாற்று நீர்வழங்கல் திட்டத்துக்கென 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, திட்டப்பணி மனையும் உத்தியோகபூர்வமாக வெள்ளாங்குளத்தில் 2024 மே மாதம் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. எனினும் 2025 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் இந்த திட்டத்துக்கு நிதியொதுக்கப்படாமையையிட்டு மிகவும் கவலையும் ஏமாற்றமும் அடைகிறோம். எனவே இந்தத் திட்டத்தின் நிறைவேற்றலுக்கான போதிய நிதியை தற்போது பரிசீலிக்கப்படும் வரவு - செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒதுக்கீடு செய்யவேண்டும் - என்றார். (ச-20,125)

# அறநெறி சமூகவிழா

பளை, பெப்.26

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலின் 15 ஆவது அறநெறி சமூக விழா யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்இ.கணேசலிங்கம் தலைமையில் கோவில் முன்றலில், மகாசிவராத்திரி தினமான இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக பளை பிரதேச சபைச் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன், இயக்கச்சி மகாவித்தியாலய அதிபர் க. கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 9)

# தையிட்டிப் பிரச்சினைக்கு 6 மாதங்களில் தீர்வாம்

## கூறுகின்றது சிவசேனை

யாழ்ப்பாணம், பெப். 26

தையிட்டி விகாரைப் பிரச்சினையை தாம் ஆறு மாத காலத்துக்குள் தீர்த்து வைப்போம் என்று சிவசேனை அமைப்பினர் தெரிவித்துள்ளனர்..

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் அவ்வாறு தெரிவித்தனர்.

மக்களின் காணி மக்களுக்கே என்பதில் நாமும் உறுதியாக இருக்கிறோம். இது தொடர்பில் தையிட்டி விகாரை அமைய்பெற்றுள்ள காணி உரிமையாளர்களுடன் நாம் பேசவுள்ளோம். அவர்களுடன் பேசிய பின்னர் விகாராதிபதியுடனும், பௌத்த மதத் தலைவர்களுடன் பேசி, விகாரை தொடர்பான பிரச்சினையை முடிவுறுத்துவோம். அதற்கு எமக்குக் குறைந்தது 6 மாதகாலமாவது வேண்டும். அதற்குள் வேறுசிலர் அரசியல் செய்து அதனைக் குழப்பவேண்டாம் என்றும் தெரிவித்தனர். (ச-20)

# முழங்காவிலுக்கு புதிய பஸ் சேவை


கிளிநொச்சி,பெப்.26

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து முழங்காவில் இரணைமாதா நகர் வரையான பகுதிகளுக்கு புதிய பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து புறப்படும் இந்த பஸ் அக்கராயன், முழங்காவில் நாச்சிக்குடா ஊடாக இரணைமாதா நகர் வேளாங்கண்ணி வீதி ஊடாகச் சென்றடையும்.

பின்னர் அங்கிருந்து மீண்டும் வேளாங்கண்ணி வீதி ஊடாக மறுநாள் காலை 5.15க்கு புறப்பட்டு காலை 8 மணியளவில் கிளிநொச்சியை வந்தடையும் என்று கிளிநொச்சி பேருந்து சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-33-113)

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருக்கைலாசவாகன உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-66)



# கரோக்கிப் பாடகர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ். இசைக் கலையகம் நடத்தும் மாபெரும் 'சிலோன் சிங்கர் செலக்சன்' கரோக்கி இசைமூலமான பாடகர் தெரிவுப்போட்டியின் முதலாம் சுற்று நிகழ்வு ருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-41-125)

# தேர்த்திருவிழா

பருத்தித்துறை,பெப்.26

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 9ஆம் நாள் உற்சவமாக இரதோற்சவம் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. அன்று சண்டேஸ்வரர் உற்சவம் இடம்பெற்று மறுநாள் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு பிராயச்சித்த அபிசேகமும் மாலை 6 மணிக்கு வைரவர் மடையும் இடம்பெற்று மஹோற்சவம் நிறைவடையவுள்ளது. (ச-41-100)

# குறைகேள் சந்திப்பு

நெடுந்தீவு, பெப்.26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தினரால் நெடுந்தீவுப் பிரதேச மக்களுடனான குறைகேள் சந்திப்பு, நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 11மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதேசமக்களையும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-25,9)

# கரப்பந்தாட்டம்

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் , வருடந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைநலன் பாராட்டு

வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜின் சேவைநலன் பாராட்டு விழா, பிரியாவிடை நிகழ்வு என்பன யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாவட்டச்செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகளால் வாழ்த்துரைகள் நிகழ்த்தப்பட்டன. (ச-25,66)



"அழகான கடற்கரை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளம்" எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கந்தரோடைக் குளக்கரையை சுத்தம் செய்யும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-22,66)





வேலணைப் பிரதேச செயலகத்தின் தூய இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் குறிகட்டுவான் மற்றும் அதனை அண்டிய கடற்கரைப் பகுதிகள் அண்மையில் சுத்தம் செய்யப்பட்டன.
இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இலங்கைக் கடற்படையினர், பிராந்தியத்தின் பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)



மகா சிவராத்திரியை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம், மல்வில் கிருஷ்ணன் ஆலயம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பிரதேச அறநெறிப்பாடசாலைமாணவர்களுக்கான போட்டிகள் பிரதேசசெயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்டன. (ச-25,9)






பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பேரில், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேலணைப் பிரதேசத்துக்கான பிறப்பு இறப்பு பதிவாளராகவும் மற்றும் தீவுப் பகுதிக்கான விவாகப் பதிவாளராகவும் கு. துசாந்தன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன், பிரதிப்பதிவாளர் நாயகம், உதவிப் பதிவாளர் நாயகம் மற்றும் காணி மாவட்ட பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25-27-66-9)



தூய இலங்கைத் திட்டத்திற்கமைய ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினால் பருத்தியடைப்பு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் உள்ள கடற்கரைகள் தூய்மைப்படுத்தப்பட்டதுடன் எழுவைதீவில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கண்ணாடிப் போத்தல்கள் படகு மூலம் ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவரப்பட்டன. (ச-25,9)



கிளிநொச்சி உளநல சங்கத்தின் ஏற்பாட்டில் வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதிதாக திருமணமான 26 தம்பதிகளுக்கு 3 நாள் பயிற்சிநெறி வேலணைப் பிரதேச செயலர் க.சிவகரன். தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பயிற்சி நெறியில் வளவாளர்களாக தினேஷன், செந்தூரன், மதனகுமார், மருத்துவர் நெலியா ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி வழங்கினர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை


26.02.2025
புதன்கிழமை

> வெற்றி என்பது ஓர் அறிவியல்; அதற்கான நிபந்தனைகள் உங்களிடம் இருந்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.
>
> - ஒஸ்கார் வைல்டு

# மகிமை நிறைந்த மஹா சிவராத்திரி

பிரமாக்குமார் நடராஜா
(ஓய்வுநிலை வங்கியாளர்)

மக்கள் தமது அன்றாட வாழ்வில் துன்பத்தில் துவண்டு தவிப்பதற்கு அவர்களின் எண்ணங்களே காரணம். எண்ணத்தின் விளைவு பாவத்தின் சுமையாகின்றது. மனிதன் எண்ணங்களால் ஆசைகள் மீது பற்றுக்கொண்டு அழியாத ஆத்மாவை சரியாக இயக்க மறந்துவிடுகிறான். அதனால் அமைதியை இழந்து துன்பக்கடலில் வீழ்ந்து தவிக்கின்றான். அந்தவகையில், நாம் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அனைத்தையும் போக்க வல்லவர் இறைவன் ஒருவரே. பரம்பொருள் இறைவன் மீது புலன்களை அடக்கி மனதை ஒருமுகப்படுத்தி நினைவு செய்து தியானம் மேற்கொண்டால் முக்திப்பேறு கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை ஆகும். எனவே, விஞ்ஞானத்தையும் கடந்து மெஞ்ஞானப் பொருளாக விளங்கும் ஈசனை சிவராத்திரி நாளன்று கண்விழித்து பக்தர்கள் வேண்டுவதும் அதன் பலனை வேண்டி நிற்பதும் நாம் அறிவோம்




வருடந்தோறும் மாசி மாதத்தில் வருகின்ற தேய்பிறைத் திரியோதசி திதியில் அமைந்த பிரதோஷ நாளன்று இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மாதந்தோறும் இரண்டு பிரதோச விரதமாக வருடத்தில் 24 பிரதோச விரதநாள் அமைந்த போதிலும் மாசி மாதத்து பிரதோஷ விரதநாள்கள் மகிமையானது. அன்றைய நாளையே இந்துக்கள் மஹா சிவராத்திரி என அழைக்கின்றனர்.


இவ்விரத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின்போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள், சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் 'சிவராத்திரி' என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடையவேண்டும் என்று பிராத்தித்தார் இறைவனும் அவ்வாறே என்று அருள் புரிந்தார்.

அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான் சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப்பெற்றார். மகா பிரளயத்தின் பின்னர் எம்பெருமான் தனியாக இருந்து ஆழ்ந்த தவத்தில் மூழ்கியிருந்தார். எப்போதும் உடனாய சிவகாமியம்மை மீண்டும் அண்டசராசரங்களையும் படைக்கவேண்டி எம்பெருமானை நோக்கித் தவமிருந்தார். அன்னையின் தவத்தின் பலனாக ஐயன் திருவருட்சம்மதம் அருளினார். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த எம்பெருமான் அன்னையின் திருவுள்ள விருப்பத்திற்கு அமைய 'இந்நாளாகிய சிவராத்திரிச் சாமபொழுதில் கண் விழித்து விரதமிருப்பவர்க்குரிய பலனைத் தந்தருளினார். அம்பிகைக்கு சிவன் அருவுருவில் (உத்பவம்) உபதேசம் செய்த ஆகம உபதேச புண்ணிய காலமான மகா சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கும்போது புத்திசாலி குழந்தைகள் அமைவர். குபேரனிடம் இருப்பதுபோல் வற்றாத செல்வம் கிடைத்து நிலைக்கும். ஒரு வருடம் முழுவதும் ஐந்து பிரிவு சிவராத்திரி விரதம் கடைபிடித்தால் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். சிவராத்திரி விரத முறையில் சிவராத்திரிக்கு கண் விழிப்பது ஏன்? சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். உபதேசம் தந்த குருவைப் பூஜைசெய்துவிட்டு உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ணவேண்டும். இவ் விரதம் உலகின் அனைத்து சிவாலயங்களிலும் அனுட்டிக்கப்படும். இந்தியப் பெருநிலப்பரப்பில் எத்தனையோ சிவ ஆலயங்கள் இருந்த போதிலும் 12 ஜோதிலிங்க ஆலயங்கள் பிரசித்தி பெற்றவை. அவற்றை முறையாக வணங்கி வலம்வந்து தரிசித்தால் நன்மைகள் கிடைக்கும் என்பதும் முக்திப்பேறு அடையலாம் என்பதும் உலகில் உள்ள பக்தர்களின் அளவற்ற நம்பிக்கைகளாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் பல்வேறு மாகாணங்களில் உள்ள காரணத்தாலும் மொழிப் பிரச்சினை மற்றும் வாழ்வில் பண வசதியின்மை காரணத்தாலும் அனைவராலும் இவ்வழிபாடு இயற்றமுடியாமல் போகின்றது. குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள சோமநாதர் ஆலயம் மிகவும் பழமைவாய்ந்த ஆலயம் ஆகும்.

பரம்பொருள் சிவன் அழியாத ஞானம் என்னும் அமிர்தத்தை கொடுத்து மனித ஆத்மாக்களை தெய்வீகக் குணங்கள் நிறைந்தவர்களாக்கி சுவர்க்க வாழ்வு கொடுக்கும் தீர்த்த ஸ்தலமாக விளங்கும் இந்த ஆலயம் முதன்மையும் பழமையும் பிரசித்தி பெற்றதுமாக விளங்குகின்றது. இந்த ஆலயத்திற்கு மஹா பாரதப் போருக்கு முன்னதாக பஞ்ச பாண்டவரில் ஒருவரான அருச்சுனன் தவம் இருந்து வரம்பெற்ற வரலாறும் உள்ளது. அந்தவகையில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சோமநாதர் தரிசனம் மஹா சிவராத்தரியை முன்னிட்டு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை யாழ்ப்பாணம் இல. 211 பிறவுண் வீதியில் அமைந்துள்ள "சுக தாமம்" மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி ஜோதிலிங்க தரிசன நிகழ்வில் கலந்து குறைகளைத் தீர்த்து மனசாந்தி பெறும் அரிய வாய்ப்பு யாழ்.மக்களுக்குக் கிட்டியது சிவனின் ஆசியே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். பண்ணை நடைபாதையில்

# கோலாகலமாக நடைபெற்ற திறந்தவெளிக் கொண்டாட்டம்!

பெப்ரவரி 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பண்ணை நடைபாதை மற்றும் கோட்டையின் பண்ணை பக்கப் பகுதி, திறந்த வெளிக் கொண்டாட்ட நிகழ்வுகளால் அதிர்ந்தன. மகிழ்வூட்டும் விளையாட்டுகள், பாரம்பரியப் போட்டிகள், உணவுகள், யோகாசனம், பொப் இசைப் பாடல் போன்றவை மக்களை மகிழ்வித்தன. சிகரம் நிறுவனத்தின் படலை சுற்றுலாசேவைப் பிரிவு, ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையம் என்பன இணைந்து, ESAF Global Canada நிறுவனத்தினருடன் கூட்டாக முன்னெடுத்த இந்த நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இந்தப்பகுதியில் ஒரு மாலைநேர மகிழ்வூட்டல் பொழுதாக அமைந்திருந்தது.

கிறிஸ்துவுக்கான இளைஞர் அணியின் தொண்டர்களின் ஏற்பாட்டில் மாலை 4 மணியளவில் ஆரம்பமான விளையாட்டு நிகழ்வுகளில் சிறுவர்கள், இளைஞர், யுவதியர், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் உற்சாகமாகக் கலந்துகொண்டு மகிழ்வடைந்தனர்.

சாக்கோட்டம், பலகை நடை, கயிறிழுத்தல், ஓலை பின்னுதல், சங்கீதக் கதிரை என ஏராளமான விளையாட்டு நிகழ்வுகள் அனைவரையும் மிகுந்த உற்சாகமான நிலைக்கு இட்டுச்சென்றன. விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. சிகரம் நிறுவனத்தின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோடீஸ்வரன் றுஷாங்கன் மற்றும் ESAF Global Canada நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் செரூபா ஆகியோர் தமது இந்த முயற்சியின் நோக்கம், இலக்குகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.





தொடர்ந்து, சிகரம் நிறுவனத்தின் ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையத்தின் யோகாசன வழிகாட்டல் நிகழ்வு நடைபெற்றது.

யோகக் கலையில் இந்திய அதியுயர் பட்டம் பெற்ற யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த யோகாசன வழிகாட்டல் நிகழ்வில்,

சிறுவர் யோகக்கலை நிபுணர் சித்த மருத்துவர் இரத்னலகி, ஆயுசு 100 யோகாசன ஆசான் சித்த வைத்தியர் இராகுலன், சக பயிற்றுநர் சித்த மருத்துவர் தர்சினி, வைகறை யோகாசனப் பயிற்சி மையத்தின் பயிற்றுநர் சித்த வைத்தியர் தனுராஜ் மற்றும் சக பயிற்றுநர் சித்த வைத்தியர் ஜனனி ஆகியோர் யோகாசனத்தின் பயன்கள், நன்மைகள், நோயற்ற வாழ்வுக்கான அதன் வழிமுறைகள் பற்றிய விளக்கங்களை பங்குபற்றியோருக்கு வழங்கினர். மருத்துவர் இரத்னலகியின் ஆயுசு சிறுவர் யோகாப் பயிற்சி நிலையத்தின் மாணவர்களான சிறுவர்களுடன் இணைந்து, ஆயுசு 100 யோகா ஆசான் மருத்துவர் இராகுலன், பயிலுநர்கள் மற்றும் வைகறை யோகாசனப் பயிற்சி மையத்தின் மருத்துவர் தனுராஜ் ஆகியோரும் இணைந்து யோகாசன செயன்முறை விளக்கங்களை வழங்கினர். தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பொப் இசைப் பாடகர் ஹென்ஸ்மன் அழகிய தமிழ் பொப் இசைப் பாடல்களை பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தார். உள்ளூர் உற்பத்தி நிறுவன உரிமையாளரான ஜீவாகரன் இணை முயற்சியாளரான அவரது மனைவி, பிள்ளைகள் இணைந்து, பாரம்பரிய ஆரோக்கிய உணவு வகைகளான குரக்கன் கூழ், புட்டும் நண்டுக்கறியும், தோசை ஆகியவற்றை தயாரித்து வழங்கி, நிகழ்வில் கலந்துகொண்டோரின் நாவுக்கும் சுவையூட்டி மகிழ்வித்தனர். உள்ளூர் மக்கள் மாத்திரமன்றி, யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த நிகழ்வைக் கண்டுகளித்து, உணவு வகைகளையும் சுவைத்தனர். யாழ். மாநகரசபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு நிகழ்வின் முக்கியத்துவம், அதன் எதிர்கால வளர்ச்சிக்கான தமது பூரண ஒத்துழைப்பை நல்குவதாகவும் உறுதியளித்துச்சென்றிருந்தார்.

# மலர்ந்தது பேடகம்!

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபையின் தேசிய வாசிப்புமாத நிறைவு விழாவும் பேடகம் 2 மலர் வெளியீட்டு நிகழ்வும் பிரதேசசபையின் செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தலைமையில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபையின் நூலக அரங்கில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் ஆகியோர் கலந்துகொணடனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பேடகம்2 மலர் வெளியீட்டு உரையை ஆற்றினார். பிரதம விருந்தினர் பேடகம் 2 மலரை வெளியிட்டு வைத்தார். அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் நடைபெற்றது.



புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகுக்கு இளைஞர் சாரணிய ஒளியைப் பரப்பிய சாரண தந்தை பேடன்பவெல் பிரபுவின் 168 ஆவது பிறந்ததினத்தை ( 22.02.2025) முன்னிட்டு இந்தக்கட்டுரை பிரசுரமாகிறது.**



# சாரணிய ஒளியை உலகெங்கும் பரப்பிய பேடன்பவல்

**இ.தில்லைமான்**
*ஜனாதிபதி சாரணன்*
*தருசின்னம்*
*ஆயுள்வேத வைத்தியர்*

என்னால் கூடுமானவரை எனது சமயத்துக்கும் தேசத்துக்கும் எனது கடமைகளைச் செய்வேன் என்றும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும் சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்" என்ற சாரண பிரமாணத்தை இளைஞர்களுக்கு வழங்கி இறைநம்பிக்கையுடனும் தேசப்பற்றுடனும் பிறருக்கு உதவிபுரிந்து ஒழுக்கம் உள்ளவர்களாக சமூகத்தில் உயர்வுடன் வாழ வழி அமைத்த பேடன் பவல் பிரபுவின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்வது அவசியமாகும்.

பிரித்தானியக் கடற்படைத் தளபதி டபிள்யு.ரீ.சிமித் இன் மகளான கென்றீற்றா கிறேசிக்கும் ஒக்ஸ்போட் பேராசிரியர் றொபேட்கிறெஸ் பேடன் பவலுக்கும், லண்டன் மாநகரில் 1857 ஆம் ஆண்டு பெப்வரி மாதம் 22 ஆம் திகதி பேடன் பிறந்தார். தாய் தந்தையர் சூட்டிய நாமம் இராபர்ட்டு ஸ்டீவன்சன் சிமித் பேடன் பவல். அவர் தனது ஆவது வயதில் தந்தையை இழந்தார்.

தாயாரின் அரவணைப்பில் ஏழு பிள்ளைகளும் வாழ்ந்தனர். பலமுறை கஸ்ட ஜீவனம் வந்தபோதிலும் பிள்ளைகள்மீது தாயாரும் தாயார்மீது பிள்ளைகளும் வைத்திருந்த பேரன்பால் அனைத்து கஸ்ட ஜீவனங்களும் தெரியாமலே போனது. 13 ஆவது வயதில் 1870 இல் இலண்டனில் சாட்டர்கவுஸ் கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்று படிப்பதற்குச் சேர்ந்தார். சங்கீதத்திலும் சித்திரங்கள் வரைவதிலும் வல்லவர். நடிப்புக் கலையில் திறன்மிக்கவர். கல்லூரிக்கு அருகில் உள்ள காட்டுக்குச் சென்று பறவைகளினதும் மிருகங்களினதும் சுவடுகளை பின் பற்றி சென்று வாழ்க்கைமுறைகளை அவதானிப்பார்.

கல்லூரி விடுமுறை நாள்களில் தனது நான்கு சகோதரர்களுடன் படகில் சென்று வெட்டவெளிகளில் பாசறை அமைத்து மிகவும் மகிழ்சியாக வாழ்வார். 19 ஆவது வயதில் கல்லூரியில் பட்டம் பெற்று இராணுவத்தில் இணைந்தார். குதிரைப்படை உபதளபதியாக இந்தியாவுக்குச் சென்றார். கிரிமின் யுத்தத்தில் பெரும் புகழ்பெற்று 26 ஆவது வயதில் தளபதியானார். 30 ஆவது வயதில் ஆபிரிக்காவிலே கொடிய மிலேச்ச மடோபினியீனருக்கு எதிராகவும் அஸாந்தியருக்கு எதிராகவும் ஸீலு சாதியினருக்கு எதிராகவும் பெரும் யுத்தங்களை நடத்தினார். 42 ஆவது வயதில் 1899, இல் உபதளகர்த்தர் பதவி பெற்றார்.

### மேஜர் ஜெனரல் பதவி உயர்தப்பட்டார்

42 வயதில் தென்னாபிரிக்காவில் இருந்து தாய்நாடு வந்தார். பேடன் பவெல் பெற்ற அனுபவங்களுடன் பெருந்தொகையான சிறுவர் நூல்களைப் படித்தார். சாரணக் கொள்கையை அபிவிருத்தி செய்தார் "சாரணியத்துக்காயதுணை" என்னும் நூலை எழுதினார். இந் நூல் சிறுவர் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக பேணப்பட்டது. பொன் விழா காணும் வயதில் இந்த சாரணக் கொள்கையைப் பரிசோதிப்பதற்காக 1907ஆம் ஆண்டு இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள பிரவுன்ஸி தீவிலே இருபது சாரணர்களுடன் வெட்ட வெளிப் பாசறை வாசத்தை அமைத்து சிறப்பாகப் பயிற்சி அளித்தார். பெரும் வெற்றியை பாசறை வாசத்தில் கண்டார். 1908 ஆம்ஆண்டு இளைஞர் சாரணியம் எனும் நூலை சிறார்களுக்காக இரு வாரங்களுக்கு ஒரு பிரசுரமாக ஆறு பிரசுரங்களாக சித்திரங்களைத் தானே வரைந்து வெளியிட்டார். பேடன் பவல் வாழ்கையை முழுமையாக சாரணர்களுக்காக வாழத் தொடங்கினார். 53 ஆவது வயதில் 1910 ஆம் ஆண்டு கடற்சாரணர் பிரிவையும் பெண்சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார். முதலாவது பெண்சாரணியாக பேடன் பவெலின் சகோதரி செல்வி ஆக்னஸ் இணைந்தார். 1912 இல் சாரண இயக்கத்தை உலக சகோதரத்துவமயமாக்குவதற்காக உலக நாடுகளுக்கான பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்த பொழுது முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்ததால் தடைப்பட்டது.

1912 ஆம் ஆண்டு ஓலெல் சென்கிளையரைத் திருமணம் புரிந்து வாழ்க்கைத் துணைவியாக்கினார். அதன் பயனாக இரு பிள்ளைகள் பிறந்தனர். இந்த ஆண்டில் இலங்கையில் மாத்தளை புனித தேவாலய வித்தியாலயத்தில் பிரான்ஸிஸ் ஐரேஜஸ்டி வென்சன் என்பவரால் சாரண ஒளி பரவ ஆரம்பித்தது. சாரண தந்தையின் 59 ஆவது வயதில் 1916 ஆம் ஆண்டு யாழ். மண்ணில் சாரண ஒளி ஐந்து கல்லூரிகளில் பரவியது. யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.புனித பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்.புனித சம்பத்தரசியார் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிலாகும். இவ்வாண்டில் பேடன் பவல் 6 வயது தொடக்கம் 11 வயதினருக்கான குருளைச் சாரணப் பிரிவை ஆரம்பித்தார். 1918 ஆம் ஆண்டு 18 வயது தொடக்கம் 26 வயதினருக்கான திரி சாரணப் பிரிவை ஆரம்பித்தார். இந்த ஆண்டில் இலங்கையில் கடற்சாரணர் பிரிவு ஆரம்பமானது. 62 ஆவது வயதில் லண்டனில் கில்வெல் பாக் சாரணர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

> **42 வயதில் தென்னாபிரிக்காவில் இருந்து தாய்நாடு வந்தார். பேடன் பவல் பெற்ற அனுபவங்களுடன் பெருந்தொகையான சிறுவர் நூல்களைப் படித்தார். சாரணக் கொள்கையை அபிவிருத்தி செய்தார் "சாரணியத்துக்காயதுணை" என்னும் நூலை எழுதினார். இந்நூல் சிறுவர் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக பேணப்பட்டது.**

யாழ்ப்பாணத்தில் பழைய பூங்காவில் வருடா வருடம் பெருந்தொகையான சாரணர்கள் ஒன்றுகூடி பாசறை வாசம் அமைத்து வருடாந்த ஒன்றுகூடலை சிறப்பாக கொண்டாடிவந்தனர். உலக மகா யுத்தம் முடிவுக்கு வந்ததும் சாரண தந்தை உலகப் பயணங்களை மேற்கொண்டார். 1920 ஆம் ஆண்டு வையகம் கண்ட முதலாவது உலக சாரணர் மேலனத்தை லண்டனில் நடத்தினார். சர்வதேசத்திலும் உள்ள சாரண சகோதரர்கள் இலண்டன் வந்து ஒன்று கூடினர். உலக சாரண மேலனத்தின் இறுதி நாள் ஓகஸ்ட் 6 ஆம் திகதி பேடன் பவல் உலகப் பிரதம சாரணர் என்று பிரகடனம் செய்யப்பட்டார். 1924, 1929 , 1933, 1937 ஆம் ஆண்டுகளில் முறையே டென்மார்க், இங்கிலாந்து, வுங்கேரி ஷாலண்ட்களில் பேடன் பவெலால் நடத்தப்பட்டன. 1925 ஆம் ஆண்டு 68 ஆவது வயதில் வலது குறைந்தோருக்கான சாரண பிரிவை ஆரம்பித்தார். சாரண தந்தையின் 71ஆவது வயதில் உலகின் நாகரீகதேசம் எங்கும் சாரண இயக்கத்தின் 21ஆவது ஆண்டில் சுமார் இருபது இலட்சம் சாரணர்கள் இருந்தமையைக் கண்ட ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் கில்வெல் பேடன் பவெல் பிரபு என்று பெயர் சூட்டிக் கௌரவித்தார். 1931 இல் முதலாவது திரி சாரணர் உலக சம்மேளனம் நடைபெற்றது. 1941ஆம் ஆண்டு விமான சாரணர் பிரிவு ஆரம்பிக்கபட்டது.

இலங்கைக்கு 1921 ஆம் ஆண்டிலும் 1934 ஆம் ஆண்டிலும் பேடன் பவல் பிரபுவும் துணைவியாரும் 1958 இலும் 1968 இலும் துணைவியாரும் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்ட பொழுது யாழ்ப்பாண சாரணர்களின் அதி உன்னத வளர்ச்சியை கேள்வியுற்று யாழ். மத்திய கல்லூரிக்கு வந்து யாழ். சாரணர்களையும் அதிபர்களையும் சாரண ஆசிரியர்களையும் சாரண ஆணையாளர்களையும் சந்தித்து மேலும் சாரணியம் வளர அறிவுரைகளை வழங்கி சென்றார். சாரணியத்தை உலககெங்கும் பரப்பிய பேடன்பவல் 84 ஆவது வயதில் 1941 ஜனவரி 8 ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செவ்வந்தியின் தாயும் சகோதரனும் கைது

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் கடந்த 19ஆம் திகதி துப்பாக்கிச்சூடு மேற்கொண்டு கணே முல்ல சஞ்சீவ என்பவரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கி ழமை கொழும்பு குற்றப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கட்டுவெல்லேகம பகுதியைச் சேர்ந்த பிங்புர தேவகே சமிந்து திவங்க வீரசிங்க என்ற 23 வயதுடைய இளைஞனும், அதே பகுதியைச் சேர்ந்த சேசத்புர தேவகே சமந்தி என்ற 48 வயதுடைய பெண்ணும் கொலை தொடர்பான தகவல்களை மறைத்து, கொலைக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய தற்போது தேடப்பட்டுவரும் இஷாரா செவ்வந்தியின் தாயார் மற்றும் இளைய சகோதரன் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கணேமுல்ல சஞ்சீவவை சுட்டுக் கொன்ற பிறகு தப்பி ஓடிய வழக்கறிஞர் வேடமணிந்த சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி, தனது தம்பிக்கு குறுஞ்செய்தி மூலம் 'வேலை முடிந்தது' என்று அனுப்பியுள்ளார் எனப் பொலிஸார் அறிந்துள்ளனர். (ச-இ)

கலாவதியான சோடாக்கள்

## குளிர்பானக்கடைக்கு ரூ.30,000 தண்டம்

நல்லூர் சுகாதார மருத்துவ பணிமனைக்குட்பட்ட திருநெல்வேலிப் பகுதியில் காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்கு வைத்திருந்த குளிர்பானக் கடையொன்றுக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நிர்மலானந்தனின் வழிகாட்டலில் திருநெல்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் கடந்த மாதம் குளிர்பானக் கடைகள், உணவகங்கள், தேநீர்சாலை என்பன சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே குறித்த குளிர்பானக்கடை சிக்கியது.


குறித்த கடை உரிமையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு நேற்று யாழ்.மேலதிக நீதிவான் எஸ். லெனின்குமார் தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (ச-125)

## குறைகேள் சந்திப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவுப் பிரதேசப் பொதுமக்களுக்கான குறைகேள் சந்திப்பு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நெடுந்தீவுக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் உட்பட அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே, நெடுந்தீவு வாழ் பொதுமக்களையும், பொதுமக்களின் பிரதிநிதிகளையும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ம-66)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 07 . 1942

மறைவு 25 . 02 . 2025

### வேலுப்பிள்ளை தம்பிராசா

இத்தாவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிராசா அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு புதல்வனும் கனகம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிதம்பரம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா கனகம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவி (ஜேர்மன்), கலியுகவரதன் (பிரான்ஸ்), கேதீஸ்வரி, விஜயலட்சுமி (பிரான்ஸ்), ஜெயலட்சுமி (ஜேர்மன்), குகதாசன் (பிரான்ஸ்), வசீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினராசா (ஜேர்மன்), வளர்மதி (பிரான்ஸ்), அருந்தவலிங்கம், சிவபாதம் (பிரான்ஸ்), இரவீந்திரன் (ஜேர்மன்), அகிலா (பிரான்ஸ்), சிவறஞ்சனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரகாஷ், பிரசா, அனுஷன், அகல்யா, தஜீபன், கோபினி, அபி, அபிஷா, அபிரா, பிரவீன், நிறோஜன், இனியா, அக்ஷயா, கபிசயா, அர்சன், விசாகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல 465/16A பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக அரசர்கேணி, புன்னையடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


இல 465/16A
பருத்தித்துறை வீதி
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 430 4991, 077 608 8338
076 898 0712

(CS 29832) V-1

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் பரிமளம்



தோற்றம் 21.08.1948

மறைவு 25.02.2025

கூவில் புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பரிமளம் அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-இரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கிட்டிணன்-செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், அருள்நந்தி (உரிமையாளர்-றோயல் மதுபான விற்பனை நிலையம் -சுன்னாகம் வீதி, புத்தூர்), சிவரூபன் உரிமையாளர் (புலோலி மதுபான விற்பனை நிலையம், கிராமக் கோட்டடி புலோலி, சிவாஸ் வைன் ஸ்ரோர்ஸ்-திருகோணமலை, சிவாஸ் Hotel Restaurant and Wedding Hall, T.T.N வைன் ஸ்ரோர்ஸ்-A9 வீதி, கிளிநொச்சி, Phoenix வைன் ஸ்ரோர்ஸ்-முல்லைத்தீவு, ஈரோடு அம்மன் மெஸ்-பம்பலப்பிட்டி, கொழும்பு, Pan global import and export-Joseph Lane Bambalapitiya) , வாசுகி (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரேவதி, லூசியா, கிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதர்சன், வசீகரன், நிரூபா, நிரூஜா, கர்சா, சியாத், அபினா, அபிசன், வரிஸ், கவித், தருணிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சின்னம்மா, புஸ்பமலர், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும், றங்கா, லலிதா, ரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2025) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென் மேற்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸ விகாரைக் காணிகளை கொள்ளையடிக்க முயற்சியாம்

*புதிய கதை கூறுகின்றார் வீரவன்ஸ*

கொழும்பு, பெப்.26

மன்னர் காலத்தில் திஸ்ஸ விகாரைக்கு வழங்கப்பட்ட காணியில் தற்போது ஒரு சதவீதமே எஞ்சியுள்ளது. அதையும் தனியார் காணியெனக்கூறி கொள்ளையடிக்க முற்படுகின்றனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது*

யாழ்ப்பாணத்திலுள்ள திஸ்ஸ விகாரை புராதன விகாரையாகும். அந்த விகாரைக்கு மன்னர்கள் வழங்கிய காணியில் நூற்றுக்கு ஒரு சதவீதம்கூட தற்போது இல்லை. அந்த ஒரு சதவீத காணியையும் தனியார் காணியென்கூறி கொள்ளையடிக்க முற்படுகின்றனர்.

மூன்று நாள்களுக்கு போராட்டம் நடத்த முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் அதனை பொருட்படுத்தாது, பொலிஸார் முன்னிலையிலேயே போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல மண்வெட்டியையும் எடுத்துவருங்கள் அழைக்கின்றனர். இதுவிடயத்தில் சட்டம் உரிய வகையில் செயல்படாதது ஏன்? - என்றார். (எ-44)

## பெயர் மாற்றம்

மானிப்பாய் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலில் வசிக்கும் **பிரபாகரன் சசிதா** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **பிரபாகரன் சுசிதா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பிரபாகரன் சுசிதா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(CS/2614) J-1

**பிரபாகரன் சுசிதா**

## வவுனியா கால்நடைவளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அழைப்பு

மேற்படி சங்க வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 08.03.2025 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள தகைமையுள்ள சங்க அங்கத்தவர்கள் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர்,**
**வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்.**
**024 222 3367**


(cr.44420) (N-1)

## இழப்பீடு

பச்சிலைப்பள்ளிப் பிரதேசச் செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்க ளுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டன. மின்னல் தாக்கத்தினால் பாதிக் கப்பட்ட மற்றும் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்த குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகைகளும் அத்துடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளால் விநியோகிக்கப்பட்டன. (ச-25-9)

## மரண அறிவித்தல்

### அமரர் செல்லத்துரை சத்தியசீலன்



**தாயின் மடியில்** **23.06.1974**
**இறைவன் அடியில்** **24.02.2025**


மானிப்பாயை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சத்தியசீலன் நேற்று முன்தினம் (24.02.2025) திங்கட்கிழமை அன்று கர்த்தருக்குள் வாசம் பண்ணினார். இவர் சின்னத்தம்பி செல்லத்துரை, செல்லத் துரை ஞானமணி ஆகியோரின் அன்பு மகனும் சத்தியசீலன் கிறிஸ்ரீன் சிந்துஜாவின் அன்புக் கணவரும் தோமஸ் மேசாக்கின் பாசமிகு தந்தையும் ஜெயசீலன், சத்தியா, சத்தியராஜி (France), செந்தூரன் (London), பிரதீபன், பிரதீபா ஆகியோரின் மூத்த சகோதரனும் அமித்தா, கெனடி, ரமேஸ், சுரேக்கா, மானெல், றொகேஷியன் ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை, இன்று (26.02.2025) காலை 8.00 மணிக்கு உடுவில் வீதியில் அமைந்துள்ள பெத்தேல் ஆலயத்தில் நடைபெற்று 9.00 மணிக்கு அன்னாரின் யாழ்ப்பாணம் இல.101, றக்கா றோட்டில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று மாலை 3.00 மணிக்கு மானிப்பாய், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை சேமக்காலையில் .இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
(CS 29830) V-1 **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### சிறிய புஸ்பம் சிறில் சுகந்தரன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிறியபுஸ்பம் சிறில் சுகந்தரன் அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்-மரியாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அந்தோனி சிறில்-தவமணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிறில் சுகந்தரன் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் யூட் திலீபன் (Ceylinco General Insurance Ltd Senior Insurance executive) அவர்களின் அன்புத் தாயாரும் ருலக்ஸ்ரியாவின் அன்பு மாமியாரும் செப்ரின், ஆன்ஸ் பியூறி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மரியசம்பூரணம், ஹென்றி, வின்ஸ்சஸ்லாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றெஜினா, திரேசா, றீற்றா, பெஞ்சமின், மத்தியூஸ், சாந்தி கிறேஸ் ஆகியோரின் மைத்துனியும் டேவிட் மரினா ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (26.02.2025) புதன்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியர் ஆலயத்தில் பிற்பகல் 03.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகன்-077 978 8727**

## மரண அறிவித்தல்



### கலாபூசணம் திரு. இராயப்பு டேவிட்

**(மூத்த எழுத்தாளர் கே. ஆர். டேவிட்- ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)**

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் பிடாரி அம்மன் கோவில் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு டேவிட் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் திங்கட்கிழமை (24.02.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான இராயப்பு-அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை-மதலேனா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற றோஸ்மலர் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் இராசநாயகம், திருத்துவராஜா காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் பீற்றர் ஆகியோரின் சகோதரனும் ஜனகன் (கனடா), அகிலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ் மாநகர சபை), ஜனார்த்தனன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபோதினி (கனடா), காயத்திரி (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி), ஜவனியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சேயோன், மேர்வின், ஆரன், காவியா, சஹானா, ஷாரா, றியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை (27.02.2025) பிற்பகல் 2.00 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பூபாளம்**
**பிடாரி அம்மன் கோவில் வீதி**
**ஆனைக்கோட்டை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 674 0265**
(CS 2181) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 • 11 • 1943

மறைவு 24 • 02 • 2025

## செல்லத்துரை சந்திரசேகரம்

நீலியம்பனை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சந்திரசேகரம் நேற்றுமுன்தினம் (24.02.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், சசிகரன், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி, காயத்திரி ஆகியோரின் மாமனாரும், மதுரஜன், மிதுன்யா, அம்ஷனா, நட்சத்திரா, அஸ்மி, சஷ்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மநாதன், கமலாதேவி, காலஞ்சென்ற இந்திரசேகரம், மற்றும் சரோஜினிதேவி, ரவீந்திரன், குணசேகரம், காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2025) வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 57607 N-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 • 06 • 1936

இறப்பு 24 • 02 • 2025

## சின்னையா - கணபதிப்பிள்ளை

(முன்னாள் பிரதம பொறியியலாளர் / முகாமையாளர், கனியவள கூட்டுத்தாபனம் - புல்மோட்டை, சீனன்வாடி தொழிற்சாலைகள்)

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னையா கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (24.02.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சரோஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தணிகாசலம் - காந்திமதி தம்பதியரின் மருமகனும், கேதீசன், வாசுகி, மாதுமை ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவப்பிரியை, குணசீலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவன், கேசவன், இளங்கோ, வன்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கிந்துசிட்டி புலோலி கிழக்கு (கிராமக்கோடுச் சந்தி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்
071 123 4541

(24611/) N-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 • 01 • 1951

மறைவு 24 • 02 • 2025

## அம்பலவாணர் வரதராசா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் வரதராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (24.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஸ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவபாதம் மற்றும் செல்லம்மா, பொன்னம்மா, தவராசா, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமுதலிங்கம் (சுவிஸ்), உதயகுமாரி, காலஞ்சென்ற இராசகுமாரி மற்றும் இன்பநாதன், சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சசிகலா, சுயந்தன் (கனடா), சிவதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசீலன், சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுஜா, சாமினி, டானுஜன், இலக்கியன், ஓவியன், இனியாள் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல் :
குடும்பத்தினர்
077 940 1614

(CS/2615) J-I

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 • 02 • 1971

மறைவு 25 • 02 • 2025

## கதிர்காமன் நவஜீவன்

(பனை அபிவிருத்தி சபை யாழ்ப்பாணம்)

அச்செழு வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமன் நவஜீவன் அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமன் மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜிதா அவர்களின் அன்புக் கணவரும் தபோதினி, அபிராமி (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஞானசக்தி, ஞானசுந்தரவேல் மற்றும் நிஜலிங்கம் (இந்துகலாசார திணைக்களம்), கேதாரணி, பவானி, பாதநேசன் (நீர்பாசன திணைக்களம், மாங்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருணாசலம், திருத்தணிகைவேல், லதா (ஜேர்மன்), சுயாதா (பிரான்ஸ்), மணிவண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பொன்...

இரண்டு அணிகளும் பொன் அணிகளின் போரில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 ஆட்டங்களிலும், யாழ்ப்பாணக் கல்லூரி 16 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. 31 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. ஓர் ஆட்டம் கைவிடப்பட்டது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வருடத்தில், பொன் அணிகளின் போர் மூன்று நாள்கள் கொண்டதாக இடம்பெறவுள்ளது. இதன்படி நாளை, நாளைமறுதினம் மற்றும் எதிர்வரும் சனிக்கிழமை என மூன்று நாள்கள் கொண்டதாக ஆட்டம் நடைபெறவுள்ளது. நூற்றாண்டுக்கும் மேற்பட்ட பழமைவாய்ந்த இந்தத் தொடரில், மூன்று நாள்கள் கொண்டதாக ஆட்டம் நடைபெறுகின்றமை இதுவே முதல் தடவையாகும். (அ-ம-125)

## செல்வம்...

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற பட்ஜெட் மீதான இரண்டாம் வாசிப்பின்போதே செல்வம் எம்.பி. தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## இரண்டாவது...

பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது, ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, பொதுஜன பெரமுன கட்சி, சர்வஜன அதிகாரம், ஐக்கிய தேசியக் கட்சி என்பன பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தன. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவும் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

இதன்படி பட்ஜெட் மீதான இரண்டாவது வாசிப்புக்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21ஆம் திகதி வரை 19 நாள்கள் இடம்பெறவுள்ளது. 2025ஆம் நிதியாண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூன்றாவதும் இறுதியானதுமான வாக்கெடுப்பு மார்ச் மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பணமோசடியில்...

வர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பிரிட்டனுக்கு அழைப்பதாகவும், இதற்கு முற்பணமாக யாழ்ப்பாணம் கம்பர்மலையில் வசிக்கும் தனது தாயாரிடம் 5 இலட்சம் ரூபாவை வழங்குமாறும் கூறியுள்ளார்.

இதன்படி அந்த இளைஞரும், மேற்படி பெண்ணிடம் ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியதுடன், பிரிட்டனில் உள்ளவராலும், அவரின் தாயாராலும் கூறப்பட்ட திகதிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்பின்னரே அவர் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்துள்ளார். இதையடுத்து, யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய அந்த இளைஞர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## இந்திய...

தமிழக மீனவர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று நேற்று நடைபெற்றுள்ளது. இதன்போதே, இந்திய அரசாங்கத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும், இலங்கைக் கடற்படைக்கும் அழுத்தத்தை வழங்கும் வகையில் இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைமுதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறும் என்றும், அத்துடன் காலவரையற்ற வகையில் மீன்பிடி நடவடிக்கைகளில் இருந்து விலகுவதாகவும் அந்த மீனவர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-56)

## பாப்பரசர்...

சர் பிரான்ஸிஸ் தொடர்ந்தும் கவலைக்கிடமாகவே உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நுரையீரல்களில் நிமோனியாத் தொற்று ஏற்பட்டதால், ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்றுவரும் அவரை வத்திக்கானின் உயர்பீட கர்தினால்கள் இருவர் நேற்று மாலை பார்வையிட்டுள்ளனர். (அ-ம)

## சாந்தனுக்கு...

துயிலாலயம் அமைக்கப்பட்டுள்ளது. எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சாந்தனின் வித்துடல் புதைக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் துயிலாலயம் நாளைமறுதினம் 28ஆம் திகதி சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## அரிசித்...

செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசித் தட்டுப்பாட்டுக்கு நாய்களே பிரதான காரணம். ஏனெனில், இலங்கையில் 10 நபருக்கு ஒரு நாய் என்ற அடிப்படையில் நாய்களின் எண்ணிக்கை காணப்படுகின்றன. அத்துடன், மனிதர்களைவிடவும் நாய்களே அரிசியை (சோறு) அதிகம் உணவாக உட்கொள்கின்றன. எதிரணியினர் (நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கிம்) நாய்களை வளர்க்காத யால், இது தொடர்பான புரிதல் அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம் - என்றார். (அ-ம-44)

## மரணத்தில்...

தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த ஆறுமாதக் கர்ப்பிணியான தமிழினி என்பவர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்திருந்தார். இவர் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகவும் பதவி வகித்திருந்தார். அவரின் இறுதிக்கிரியைகள் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்று, சடலம் புதைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அவரது மரணத்தில் சந்தேகம் காணப்படுவதாக அவருடைய தந்தையார் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

தனது மகளின் உடலில் தீப்பற்றியமை தொடர்பில் சந்தேகமுள்ளதாக அவர் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். அவரது மரணத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் இது ஒரு இயற்கையான நிகழ்வு அல்ல. மாறாக ஒரு சந்தேகத்திற்குரிய கொலை என்பதை வலுவாகக் காட்டுகின்றன. இத்தகைய குற்றத்தின் கடுமையான தாக்கங்களைக் கருத்திற்கொண்டு ஒரு முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை விரைவில் நடத்தவேண்டும் என்றும் தனது முறைப்பாட்டில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-66)

## ஆசிரியர்கள்,...

சார்பில் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்துவரும் வழிப்பறிக் கொள்ளைகள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் தங்களது பாதுகாப்புகளை உறுதிப்படுத்துமாறு கோரியே இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிபர்களிடமும், ஆசிரியர்களிடமும் கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் வாக்குறுதி வழங்கியுள்ளார். (அ-ம-113)

## உழவியந்திரம்...

ரன் (வயது-36) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு அருகாகவுள்ள மதகருகே உழவியந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது காயமடைந்த அவர் நெடுந்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதற்கட்ட சிகிச்சையின் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இதன்போது அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

விபத்துத் தொடர்பில் நெடுந்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26-125)

## முன்பள்ளி...

நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளமானது (உதவித் தொகை) 6ஆயிரம் ரூபாவாகவே காணப்படுகின்றது. ஆனால் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் வன்னியில் நடத்தப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை சம்பளமாக வழங்கப்படுகிறது.

இந்தநிலை மாற்றப்படவேண்டும் தற்போதைய பிரதமரே கல்வி அமைச்சராகவும் இருப்பதால் இது தொடர்பில் அவர் உரிய கவனம் செலுத்தவேண்டும். வடமாகாணத்தைப் பொறுத்தளவில் முன்பள்ளி ஆசிரியர்கள் நிரந்தர நியமனமும், சம்பள உயர்வும் கோருகின்றார்கள். அத்துடன் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து வடகிழக்கு முன்பள்ளிகளும் வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சினுள் முன்பள்ளிகளாக உள்வாங்கப்பட்டு அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## குடும்பப்பெண்...

வனுடனும், பிள்ளையுடனும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது குரங்கொன்று குறுக்காகப் பாய்ந்ததையடுத்து இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது காயமடைந்த தாயும் மகளும் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், குறித்த குடும்பப் பெண் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் மேற்பார்வையாளர்கள் தேவை. 28.02.2025 வெள்ளிக்கிழமை 10am மணியளவில் நேர்முகத்தேர்வு இடம்பெறும்.
மேலதிக விபரங்களுக்கு
**077 244 9834**
(8.00am - 4.00pm)

# இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுங்கள்

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்காமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியாவின் துணைத் தூதுவர் சத்தியஞ்சல் பாண்டே, கொழும்பில் உள்ள கடற்றொழில் அமைச்சுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து அமைச்சர் சந்திரசேகரனும், துணைத்தூதுவர் பாண்டேவும் நீண்டநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போதே, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார். இந்திய மீனவர்களின் இழுவைமடி மீன்பிடியாலும், அத்துமீறிய நடவடிக்கைகளாலும் வடமாகாண மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் கடற்றொழில் அமைச்சர் இந்தியத் துணைத் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் அத்துமீறாத பட்சத்தில், இலங்கைக் கடற்படையினர் அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகுவார்கள். ஆனால் சில இந்திய மீனவர்கள் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் அவற்றைக் கண்டுகொள்ளாமல் நடந்துகொள்கின்றனர் என்றும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம-20-125)

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 17.06.1954 — மறைவு 08.03.2024




**ஈஸ்வரலிங்கம் விக்கினேஸ்வரி**

அம்மா ஆண்டு ஒன்று ஆனாலும்
அம்மா என்ற உறவை
எப்பிறப்பில் காண்போம் யாம்
நாம் மாண்டிடும் காலம் வரை
மாறாது உங்கள் நினைவு

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(cs 57606) (N-1)

**ஓராண்டு நினைவஞ்சலி**



மலர்வு 01 . 08 . 1948 — உதிர்வு 08 . 03 . 2024

**தெய்வத்திரு சின்னத்தம்பி விநாயகமூர்த்தி**

திதி: 26.02.2025 திரயோதசி

சிவராத்திரியன்று சிவலோகம் சென்றவரே
சிவனடியில் உறைந்து அமைதியும் கொண்டீரோ?
அன்போடு எமை அணைத்து
அறிவூட்டி வளர்த்த அப்பாவே !
மீண்டொருகால் வந்தெமக்கு
மிக மகிழ்வு தாரீரோ?
உங்கள் கதை கேட்க உள்ளமது ஏங்கிநிற்க!
சிந்தை முழுவதிலும் உங்கள் நினைவுகளே!
ஓராண்டு காலம் உருண்டோடினாலும்
ஈர விழிகளுடன் ஏங்கியே நிற்கின்றோம்.
சிவனடியில் நீங்கள் நிம்மதியாய் உறங்குங்கள்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இல.78, வைத்தியசாலை வீதி, முழங்காவில்.
குடும்பத்தினர்.
(cs.57592) (N-1)

**கணினித் தட்டெழுத்தாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினித் தட்டெழுத்தாளர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **077 129 9519**

**வாடகைக்கு உண்டு**

ஆஸ்பத்திரி வீதியில் முதல் மாடியில் அலுவலக பாவனைக்கு முகாமையாளர் அறை, இரு மலசலகூடம் மற்றும் சகல வசதிகளுடன் உள்ள 880 சதுர அடி இடம் வாடகைக்கு உண்டு.
**071 2963 285**
(cs 57553) (N-1)

**வேலையாட்கள் தேவை**

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்
- பொதி செய்பவர் (பார்சல்)

தொடர்புகளுக்கு: **077 407 8235**
(cs 57604) (N-1)

**காணி விற்பனைக்கு**

- வசாவிளானில் 67 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.
- இராசவீதி நிலாவரை கிணற்றுக்கு 500m தூரத்தில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தோட்டம் செய்ய, வீடு கட்ட உகந்த காணி. 2 1/2 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும். பரப்பு - 14, 000, 00/-
- தரகர் தேவையில்லை உரிமையாளருடன் நேரடித் தொடர்புக்கு.

**077 262 7581, 077 387 0140**
(CS/29612) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- ஊரெழு பிள்ளையார் கோவில் முன்வீதி
- பலாலி வீதியில் இருந்து 1Km தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஊரெழு கிழக்கு முருகன் கோவில் முன்பாக
- செம்மண் 20 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்

ஒரு பரப்பின் விலை பத்து லட்சம்(1,000,000/- ரூபாய்)

தொடர்பு: **077 468 3354 077 288 0152**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.